**இந்து காலாசார நிதியம் - 2018**

-----------------------------------------------------------------------------

**1. அபிப்பராயம்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்து காலாசார நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலினக் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது

எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகைகளை ஆரம்பிக்கும் போது தாமதங்கள் நிலவியமையால் எதிர்பார்த்த நோக்கங்களை உத்தேச காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்ளாமை. | அவ்வாறான நிலமைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை | எதிர்பார்த்த நோக்கங்களை உத்தேச காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்காக பெறுகைகள் சிறந்த முறையில் திட்டமிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுப்பதாக. | |
| (ஆ) சில சொத்துக்களின் மீதிகள் பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான நிலமைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களுக்காக பயன்பாட்டு பதிவேடுகளை அடிப்படையாக கொண்டு பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியம இலக்கம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்விடப்பட வேண்டிய போதிலும், நிதியத்திற்கு சொந்தமான உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்விடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் உபகரணங்களை பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன். | நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட வேண்டியமை மற்றும் பெறுமானத்தேய்வு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) நியம இலக்கம் 1 இன் 118(அ) பந்தியின் பிரகாரம் உரித்துகளிலான மாற்றங்கள் கூற்றின் காலப்பகுதிக்குரிய மிகை அல்லது பற்றாக்குறை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 1,107,624 தொகை உரித்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேறிய சொத்துக்களிலான மாற்றங்களுக்காகன கூற்றில் 2018 ஆம் ஆண்டிற்குரிய மிகையானது ரூபா 1,107,624 ஆனது தவறுதலாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக தாயரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 1,107,624 எனும் மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 6,586,304 ஆக இருந்தது. அதற்கமைவாக நிதி விளைவுகளில் ரூபா 5,478,680 ற்கான வீழ்ச்சியொன்று கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கொடிகள் தின சேகரிப்பு (உண்டியல் பணம்) செயற்திட்டத்தின் வருமானம் ரூபா 5,558,338 இனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

------------------------------------------------------------------------------------------------------------------------------

| விடயம் | 2018 | 2017 | வருமானம் (குறைவடைதல்)/அதிகரித்தல் செலவினம் (அதிகரித்தல்)/குறைவடைதல் | சதவீதமாக |
|---|---|---|---|---|
| ------------ | --------- | --------- | ------------------------------ | --------------- |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | |
| **வருமானம்** | | | | |
| கொடிதின சேரிப்பு | 2,226 | 7,804 | (5,558) | (71.2) |
| வெகுமதி | 3,796 | 1,251 | 2,545 | 203.4 |
| புத்தக விற்பனை வருமானம் | 212 | 419 | (207) | (49.4) |
| டிக்கட் விற்பனை வருமானம் | - | 2,044 | (2,044) | (100) |
| **செலவு** | | | | |
| ஆசிரியர்களுக்காக சேலைகளை கொள்வனவு செய்தல் | 1,150 | 2,200 | 1,050 | 47.7 |
| கோயில்களுக்கான நிதி உதவி | 2,000 | 300 | (1,700) | (566.7) |
| கொடி தின செலவினம் | 203 | 394 | 191 | 48.5 |
| அப்பியாசக் கொப்பிகளை அச்சிடல் | 2,083 | 1,684 | (399) | (23.8) |
| பயிற்சிப் புத்தகங்களை கொள்வனவு செய்தல் | 919 | - | (919) | (100) |
| சைக்கிள்களை கொள்வனவு செய்தல் | 247 | 785 | 538 | 68.5 |
| விருதுகளை வழங்குதல் | 2,001 | 1,045 | (956) | 91.5 |
| இசை நிகழ்ச்சியின் செலவினம் | - | 1,441 | 1,441 | 100 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்து சமய புத்தகங்களை மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக அப்பியாசக் கொப்பிகளை அச்சிடுவதற்காக மீளர்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக ரூபா 991,143 செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 2019 யூன் 18 ஆந் திகதி வரையிலும் ரூபா 380,413 பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | தற்போது அந்த புத்தகங்களின் அச்சிடல் பணிகள் நிறைவு செய்யப்பட்டு திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது. அவ்வாறான நிலமைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றிக்கொள்வதற்காக பெறுகை பணிகள் சிறப்பாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | அறநெறி பாடசாலைகளின் ஆசிரியர்களுக்காக சீருடைகளை கொள்வனவு செய்யும் பணி மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட போதிலும், 1,000 சேலைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,150,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது திசெம்பர் மாதத்திலேயே ஆகும். எவ்வாறெனினும், 2019 மே 30 ஆந் திகதி வரையிலும் 400 சேலைகள் மாத்திரமே | தற்போது வழங்கப்பட்டுள்ள சீருடைகளை பகிர்ந்தளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த மாதத்தினுள் எஞ்சிய சீருடைகளை பெற்றுக்கொண்டு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான நிலமைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றிக்கொள்வதற்காக பெறுகை பணிகள் சிறப்பாக திட்டமிடப்பட வேண்டும். |

கிடைத்திருந்தன.
கொள்வனவு
நடவடிக்கைகள் ஆண்டின்
இறுதியில்
ஆரம்பிக்கப்பட்டமையால்
2019 மே வரையிலும்
எதிர்பார்த்த
நோக்கங்களை
அடைந்துக்கொள்ள
நிறைவேற்றிக்கொள்ள
முடியாதிருந்தது.